# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2022.07.18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# *சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தம்)*

***(23 ஆம் அத்தியாயமான) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டத்தினைத் திருத்துவதற்கான தொரு சட்டமூலம்***

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2* :** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (23 ஆம் அத்தியாயமான) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது-

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் நோக்கத்திற்காக பிள்ளை ஒருவராக இருக்கவேண்டிய ஆளொருவரின் வயதை பதினாறு வயதிலிருந்து பதினெட்டு வயதாக அதிகரிப்பதற்குமாகும்;

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்திலும் மற்றும் எழுத்திலான சட்டத்திலும் ''இளம் ஆட்கள்'' என்பதற்கான குறிப்பீடு, அத்தகைய சொற்கள் முதன்மைச் சட்டவாக்கம் தொடர்பில் இடம்பெறும் இடங்களில் எல்லாம் அவற்றை விட்டுவிடுவதற்குமாகும்; அத்துடன்

(இ) முதன்மைச் சட்டவாக்கத்தின் "சிறுவர் கட்டளைச்சட்டம்" என மீளப்பெயரிடுவதற்குமாகும்.

***வாசகம் 3* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, பதினான்கு வயதிற்கு மேற்பட்ட பிள்ளை ஒருவருக்கு ஏற்புடையப்பாலதாக இருக்கக்கூடிய அதன் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை இயலச் செய்வதற்குமாகும்.

***வாசகம் 4* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் வாசகம் 2 இனால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 5* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, பதினாறு வயதிற்கு மேற்பட்ட பிள்ளை ஒருவருக்கு ஏற்புடையற்பாலதான இவ்வாசகத்தின் ஏற்பாடுகளை ஆக்குவதற்குமாகும்.

***வாசகம் 6* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் II இனை உபதலையங்கத்தை திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 7* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவினை மாற்றீடு செய்கின்றதென்பதுடன் அதன் சட்டப்பயனானது சிறுவர்களின் தண்டனை பற்றிய மட்டுப்பாடுகளை விதிப்பதற்குமாகும்.

***வாசகம் 8* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2021 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 9* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 7 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 10* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் மற்றும் 13 ஆம் வாசகங்களினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 11* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் மற்றும் 13 ஆம் வாசகங்களினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 12* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 13 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 13* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவினை நீக்குகின்றதென்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது சிறுவர்கள்மீது சரீர தண்டனை விதிப்பதனை அகற்றுவதற்காகும்.

***வாசகம் 14* :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 13 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 15** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 16** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் மற்றும் 7 ஆம் வாசகங்களினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 17** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவினை மாற்றீடு செய்கின்றதென்பதுடன் அதன் சட்டப்பயனானது அதனுடன் தொடர்புபட்ட கட்டளையை நீதிமன்றத்தில் குறித்துரைக்கப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலையில் தங்கவைக்கும் காலப்பகுதிக்கான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்குமாகும்.

**வாசகம் 18** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 19** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, பத்தொன்பது வயதிலிருந்து இருபத்தொரு வயதுவரை அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலை ஒன்றில் தடுத்துவைக்கும் காலப்பகுதியை நீடிக்கின்றபோது எந்த வயதெல்லையை விஞ்சக்கூடாதோ அந்த வயதெல்லையை அதிகரிப்பதற்குமாகும்.

**வாசகம் 20** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலை ஒன்றில் தடுத்துவைத்தல் காலப்பகுதி முடிவடைந்தபின்னர் முகாமையாளர் ஒருவரால் மேற்பார்வை செய்வது தொடர்பில் ஏற்புடையற்பாலதான பிள்ளை ஒருவரின் வயது எல்லையை திருத்துவதற்குமாகும்.

**வாசகம் 21** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 51அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துகின்றது என்பதுடன் சட்டப்பயனானது ஆரம்பநிலை மற்றும் இரண்டாம் நிலைப் பிரிவைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைக்காக ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்குமாகும்.

**வாசகம் 22** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 23** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 24** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 13 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 25** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 345, 360அ, 363, 364, 364அ, 365 அல்லது 365ஆ என்பதன்கீழ் ஏதேனும் தவறை அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் தவறொன்றாக இருக்கும் பிள்ளை ஒருவரின் கட்டுக்காப்பை, பொறுப்பை அல்லது கவனிப்பைக் கொண்டிருக்கும் ஆள் ஒருவரினால் அத்தகைய பிள்ளை தொடர்பில் (30 ஆம் அத்தியாயமான) ஆபாச வெளியீடுகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறை புரிதலை விளைவிக்கின்றது அல்லது ஊக்கப்படுத்துகின்றது என்பதை ஏற்பாடுசெய்வதற்குமாகும்.

**வாசகம் 26** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, வயதுமீதான மட்டுப்பாடு ஒன்று இன்றி எவரேனும் பிள்ளைக்கு ஏற்புடையற்பாலதாக இருப்பதை இப்பிரிவு இயலச்செய்வதற்குமாகும்.

**வாசகம் 27** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 28 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவினை நீக்குகின்றதென்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம்மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கான விளைவாக சொல்லப்பட்ட பிரிவு மிகையாக வந்துள்ளது என்பதாகும்.

**வாசகம் 29 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 30 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான இப்பிரிவின் சட்டப்பயனானது, "பிள்ளை" ஒன்று பதினெட்டு வயதிற்கு உட்பட்ட ஆளொருவராக மீள்வரைவிலக்கணப்படுத்துவதற்குமாகும்; 2 ஆம் வாசகத்தினால் ஆக்கப்பட்ட திருத்தங்களின் விளைவாக இளம் ஆள் ஒருவரின் வரைவிலக்கணத்தை அகற்றுவதாகும் என்பதுடன் "இளம் தவறாளர்களுக்கான பயிற்சிப் பாடசாலை" என்னும் சொல்லமைப்புக்கான புதிய வரைவிலக்கணம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்குமாகும்.

## சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தம்)

ச.வ.- ஓ. 26/2019

### (23 ஆம் அத்தியாயமான) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

***1***. இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாமென்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

23 ஆம் அத்தியாயத்தையும் எழுத்திலான சட்டம் முதலியவற்றையும் திருத்துதல்

***2***. (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (23 ஆம் அத்தியாயமான) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டத்தில் பின்வரும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் எங் கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) "சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சிறுவர்கள் கட்டளைச் சட்டம்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) "சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "சிறுவர்கள்" என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(இ) "பிள்ளை அல்லது இளம் ஆள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிள்ளை" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) "பதினாறு வயது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினெட்டு வயது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், "சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டம்", "சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள்" மற்றும் "பிள்ளை அல்லது இளம் ஆள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே, "சிறுவர்கள் கட்டளைச்சட்டம்", "சிறுவர்கள்" மற்றும் "பிள்ளை" என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கம் தொடர்பில் இச்சொற்கள் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் இடப்படுதல் வேண்டும்.

(3) முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியில் அல்லது விதியில் அல்லது முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் வழங்கப்பட்ட அறிவிப்பில், அறிவித்தலில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் "சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டம்", "சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள்", "பிள்ளை அல்லது இளம் ஆள்" மற்றும் "பதினாறு வயது" என்பவற்றுக்கான குறிப்பீடு ஒவ்வொன்றும் முறையே "சிறுவர்கள் கட்டளைச்சட்டம்", "சிறுவர்கள்", "பிள்ளை" மற்றும் "பதினெட்டு வயது" என்பவற்றுக்கான குறிப்பீடு ஒன்றாக வாசிக்கப்பட்டு பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில்-

(அ) "இளம் ஆள் ஒருவர் கொணரப்படுமிடத்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதினான்கு வயதிற்கு மேற்பட்டவரான பிள்ளை ஒருவர் கொணரப்படுமிடத்து" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) "இளம் ஆள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய பிள்ளை" என்னும் சொற்கள் அவ்வுட்பிரிவில் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் இடுவதன் மூலமும்;

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது அப்பிரிவின் ஓரக் குறிப்பில், "சிறுவர்கள் மற்றும் இளம் தவறாளர்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''சிறுவர்களை'' என்னும் சொல்லை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவினைத் திருத்துதல்

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவினைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்–

(அ) ''உரிய சட்ட நடைமுறையின்படி'' மற்றும் "அவரைப் பாரப்படுத்த வேண்டும்:" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே''உரிய நடைமுறையின்படி'' மற்றும் ''அவரைப் பாரப்படுத்துதல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் காப்புவாசகத்தை நீக்குவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "இளம் ஆள் ஒருவரின் விடயத்தில்" மற்றும் "அந்த இளம் ஆள் சிறைச்சாலைக்குப் பாரப்படுத்தப்படலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே ''பதினாறு வயதிற்கு மேற்பட்ட பிள்ளை ஒருவரின் விடயத்தில்'' மற்றும் ''பதினாறு வயதிற்கு மேற்பட்ட அத்தகைய பிள்ளை விளக்கமறியல் மனையில் இடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் II இன் 22 ஆம் பிரிவிற்கு உடன் முன்னர் காணப்படுகின்ற உபதலைப்பு இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உபதலைப்பு இடப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் II இன் உப தலைப்பைத் திருத்துதல்

**"பிள்ளைத் தவறாளர்கள்"**

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றதென்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“சிறுவர்களை தண்டிப்பது பற்றிய மட்டுப்பாடுகள்

23. (1) பிள்ளை ஒருவர் ஏதேனும் தவறொன்றுக்கு மறியற்தண்டனை இடப்படுவதற்கு கட்டளை இடப்படலாகாது அல்லது குற்றப்பணக் கொடுப்பனவொன்றின் தவறுகையில் சிறைச்சாலைக்குப் பாரப்படுத்தப்படலாகாது.

(2) பதினாறு வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதை எய்தியுள்ள பிள்ளை ஒருவரின் விடயத்தில், அத்தகைய பிள்ளை அடங்காத பண்பைக் கொண்டிருப்பதன் காரணமாகவும், அத்துடன் விளக்கமறியல் மனையில் அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலையில் தடுத்துவைக்கப்பட முடியாத காரணத்தினாலும் அல்லது அவர் வக்கிரமான பண்பு கொண்டிருப்பதன் காரணமாகவும் அவர் அவ்வாறு தடுத்துவைக்கப்படுவதற்கு பொருத்தமான ஆளொருவராக இருக்கமாட்டார் எனவும் நன்னடத்தை அலுவலர் அபிப்பிராயப்படுமிடத்து, நீதிமன்றம் மருத்துவ நிபுணர்களினால் அத்தகைய பிள்ளை பற்றி செய்யப்பட வேண்டிய உளவியல்சார் மதிப்பீடு ஒன்றை செய்விப்பதற்கும் நீதிமன்றத்திற்கு அறிக்கை இடுவதற்கும் நன்னடத்தை அலுவலரைப் பணித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உளவியல்சார் மதிப்பீடு பற்றிய அறிக்கை, விளக்கமறியல் மனை ஒன்றில் அப்பிள்ளை தடுத்துவைக்கப்படுவதற்கு பொருத்தமானவர் அல்ல என உறுதிப்படுத்துகின்றவிடத்து, நீதிமன்றமானது (25 ஆம் அத்தியாயமான) இளம் தவறாளர்கள் (பயிற்சி பாடசாலைகள்) கட்டளைச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வயது மற்றும் தடுத்துவைத்தல்

காலப்பகுதி தொடர்பான ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் இளம் தவறாளர்களுக்காக பயிற்சிப் பாடசாலை ஒன்றில் தடுத்துவைக்கப் படுவதற்கு அவருக்கு கட்டளை இடுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும்:-

"(1) ஆளொருவரினால் தவறொன்று புரியப்படும் நேரத்தில் பதினெட்டு வயதிற்கு குறைத்தவரான அத்தகைய ஆளொருவர் தொடர்பில் தண்டனைச் சட்டக்கோவையின் 53 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் நீதிமன்றத்தினால் மரணதண்டனைத் தீர்ப்புக்குப் பதிலாக தடுத்தவைத்தற் தண்டனைத் தீர்ப்பு ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளவிடத்து, நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதி ஒன்றுக்கு விளக்க மறியல் மனை ஒன்றில் தடுத்துவைக்கப்படுவதற்கு அத்தகைய ஆளுக்கு கட்டளை இடலாம்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலமும்:-

"(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு தண்டனைச் சட்டக்கோவையின் 53 ஆம் பிரிவின்கீழ் நீதிமன்றம் ஒன்றினால் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றை அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட பணிப்புரை ஒன்றை பின்பற்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஆளொருவர், அவ்வாறு தடுத்துவைக்கப்படும் போது சட்டப்பாதுகாப்பில் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "நீதிமன்றம்," என்னும் சொல்லிலிருந்து, "பாரப்படுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்." என்னும் சொற்கள் வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும்:-

"நீதிமன்றம், அவர் கட்டளையில் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய நியதிக்கு விளக்கமறியல் இல்லமொன்றின் கட்டுக்காப்பில் பாரப்படுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்:

ஆயினும் எவ்வாறாயினும், பதினாறு வயதினை அல்லது அதற்கு மேற்பட்ட வயதினை எய்தியுள்ள பிள்ளை ஒன்றின் விடயத்தில், 23 ஆம் பிரிவின் (2) ஆம் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய பிள்ளைக்கும் அத்தகைய பிள்ளை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்."; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "28 (1) என்னும் பிரிவின் அல்லது 29 (1) என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "28 (1) என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பன்னிரெண்டு வயதினை எய்தியுள்ள பிள்ளை ஒருவர் அல்லது இளம் ஆள் ஒருவர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பன்னிரெண்டு வயதினை எய்தியுள்ள பிள்ளை ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "28 (1) என்னும் பிரிவின்கீழ் அல்லது 29 (1) என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "28 (1) என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில், "பிள்ளை அல்லது இளம் தவறாளர் ஒருவரை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிள்ளைத் தவறாளரை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) உட்பிரிவில், "28 (1) என்னும் பிரிவின்கீழ் அல்லது 29 (1) என்னும் பிரிவின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "28 (1) என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில் "பிள்ளை அல்லது இளம் தவறாளரைப்" என்னும்சொற்களுக்குப்பதிலாக, "பிள்ளைத் தவறாளரைப்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவினை நீக்குதல்*

**13.** முதன்மைச் சட்டவாக்கதரின் 29 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது, "25 தொடக்கம் 29 ஆம் பிரிவுகளின்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "25 தொடக்கம் 28 ஆம் பிரிவுகளின்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவானது, அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில், "பிள்ளையை அல்லது இளம் தவறாளரை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிள்ளைத் தவறாளரை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியினை இடுவதன்மூலமும்:-

"(ஆ) பதினாறு வயதினை அல்லது அதற்குமேற்பட்ட வயதினை எய்தியுள்ளவரும் இளம்தவறாளர்களுக்கான பயிற்சிப்பாடசாலை ஒன்றில் தடுத்து வைக்கப்படுவதற்கு கட்டளையிடப்பட்டுள்ளவரும் மற்றும் பாடசாலை ஒன்றில் பயிற்சிக்கு உட்படுவதற்கு இணங்குகின்ற நிபந்தனைமீது சனாதிபதியினால் மன்னிப்பளிக்கப்பட்டுள்ளவருமான பிள்ளை ஒருவர்,";

(2) அப்பிரிவிற்கான காப்பு வாசகத்தில்–

(அ) அக்காப்பு வாசகத்தின் (அ) என்னும் பந்தியில், "ஆளொருவரின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "பிள்ளை ஒருவரின்" என்னும் சொல்லை இடுவதன்மூலம்; அத்துடன்

(ஆ) அக்காப்பு வாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில், "இளம் ஆள் ஒருவரின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிள்ளை ஒருவரின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(3) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில், "சிறுவர்களையும் மற்றும் இளம் தவறாளர்களையும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிள்ளைத் தவறாளர்களை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவினை மாற்றீடு செய்தல்*

**17**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*“அங்கீகரிக்கப் பட்ட அல்லது சான்றுப் படுத்தப் பட்ட பாடசாலைக் கட்டளைகளின் காலப்பகுதி*

**42**. நீதிமன்றம் அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலை ஒன்றிற்கு பிள்ளை ஒருவரை அனுப்பிவைக்க வேண்டும் என கட்டளைகளை இடுகின்றவிடத்து, அக்கட்டளை மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாது இருக்கக்கூடிய தங்கியிருக்கும் காலப்பகுதியை குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதி முடிவடையும்வரை விடயத்திற்கேற்ப, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றுப் படுத்தப்பட்ட பாடசாலையில் அவரைத் தடுத்து வைப்பதற்காக அதிகாரம் ஒன்றாகவும் இருத்தல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**18**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவானது அப்பிரிவிற்கான ஓரக் குறிப்பில், “சிறுவர்களை அல்லது இளம் ஆட்களை” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “சிறுவர்களை” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 44 ஆம் பிரிவானது, “பத்தொன்பது வயதினை” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இருபத்தொரு வயதினை” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**20**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், “பதினான்கு வயதினை எய்தாவிடின், அவர் பதினாறு வயதினை எய்தும் வரை” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பதினெட்டு வயதினை எய்தாவிடின், அவர் இருபது வயதினை எய்தும் வரை” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 51அ என்னும் பந்தியினை உட்புகுத்துதல்

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன் முதன்மைச் சட்டவாக்கத்தின் 51அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"ஒவ்வொரு அங்கீகரிக்கப் பட்ட அல்லது சான்றுப் படுத்தப்பட்ட பாடசாலையும் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பிரிவுகளை கொண்டிருத்தல்

51அ.(1) அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றுப் படுத்தப்பட்ட பாடசாலை ஒவ்வொன்றில்-

(அ) "ஆரம்ப பிரிவு" ஒன்று அதில் பதினைந்து வயதினை எய்தாமல் உள்ள சிறுவர்கள் தடுத்துவைக்கப்பட வேண்டும்; அத்துடன்

(ஆ) "இரண்டாம் நிலைப் பிரிவு" அதில் பதினைந்து வயதினை எய்தியுள்ளவரும் ஆனால் பதினெட்டு வயதினை எய்தாமல் உள்ள சிறுவர்கள் தடுத்துவைக்கப்பட வேண்டும்.

(2) அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றுப்படுத் தப்பட்ட பாடசாலை ஒன்றிற்கு பிள்ளை ஒருவரைப் பாரப்படுத்துகின்ற-

(அ) 26 ஆம் பிரிவின்கீழ் கட்டளை ஒன்றை நீதிவானொருவர் ஆக்குமிடத்து; அல்லது

(ஆ) 32 ஆம் பிரிவின்கீழ் கட்டளை ஒன்றை அமைச்சர் ஆக்குமிடத்து,

26 ஆம் பிரிவின்கீழான அத்தகைய கட்டளை அல்லது 32 ஆம் பிரிவின்கீழான அத்தகைய கட்டளை பாரப்படுத்தும் நேரத்தில், பிள்ளை ஒருவரின் வயதைப் பொறுத்து, அத்தகைய பாடசாலையை ஆரம்ப பிரிவிற்கு அல்லது இரண்டாம் நிலைப் பிரிவிற்கு பிள்ளையை பாரப்படுத்தப்படுதல் வேண்டுமா என்பதனைக் குறித்துரைத்தல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், அத்தகைய பாடசாலையின் முகாமையாளர் அத்தகைய பிள்ளை பதினைந்து வயதினை அடைந்திருப்பதன் மீது, ஆரம்பப் பிரிவில் இருக்கும் ஒரு பிள்ளையை இரண்டாம்நிலைப் பிரிவிற்கு மாற்றுதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**22.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது-

(1) அவ் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், “(அ) அத்தகைய பிள்ளை பதினாறு வயதிற்கு உட்பட்டவராக இருப்பின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “(i) அத்தகைய பிள்ளை பதினாறு வயதிற்கு உட்பட்டவராக இருப்பின்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், “(ஆ) அத்தகைய பிள்ளை பதினாறு வயதினை எய்தியுள்ளவராயின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “(ii) அத்தகைய பிள்ளை பதினாறு வயதினை எய்தியுள்ளவராயின்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**23.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவானது, “பிள்ளை மற்றும் இளம் ஆட்கள் என்னும் சொல்லமைப்புகள் என்பது” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “பிள்ளை என்னும் சொல்லமைப்பு என்பது” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**24.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவானது அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**25**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பெண்ணாக இருக்கும் இளம் ஆள் ஒருவரின் கட்டுக்காப்பை, பொறுப்பை அல்லது கவனிப்பை கொண்டுள்ள எவரேனும் ஆள்" என்னும் சொற்களிலிருந்து, "விளைவித்தால் அல்லது ஊக்குவித்தால்" என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "பெண்ணாக இருக்கும் பிள்ளை ஒருவரின் கட்டுக்காப்பை, பொறுப்பை அல்லது கவனிப்பைக் கொண்டுள்ள எவரேனும் ஆள் தண்டனைச் சட்டக்கோவையில் பிரிவுகள் 345, 360அ, 363, 364, 364அ, 365 அல்லது 365ஆ என்பவற்றின்கீழான ஏதேனும் தவறை அல்லது (30 ஆம் அத்தியாயமான) ஆபாசமான வெளியீடுகள் கட்டளைச் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறை அத்தகைய பிள்ளை தொடர்பில் புரிவதை விளைவித்தால் அல்லது ஊக்குவித்தால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஒரு பெண்ணாக இருக்கும் பிள்ளை ஒருவர் அல்லது இளம் ஆள் தொடர்பில், புரியப்பட்டுள்ளவிடத்து, ஆளொருவர் எவரேனும் விலைமாதுடன் அல்லது ஒழுக்கக்கேடான பண்பை உடையவரென அறியப்பட்ட ஆளுடன் மண உறவு வைத்திருப்பதற்கு அல்லது எவரேனும் விலைமாதின் அல்லது ஒழுக்கக்கேடான பண்பை உடையவரென அறியப்பட்ட ஆளின் தொழிலில் பிரவேசிப்பதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்கு அவர் அறிந்துகொண்டு அனுமதித்திருப்பின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிள்ளை ஒருவர் தொடர்பில் புரியப்பட்டுள்ளவிடத்து, ஆளொருவர் எவரேனும் விலைமாதுடன் அல்லது ஒழுக்கக்கேடான பண்பை உடையவரென அறியப்பட்ட அத்தகைய பிள்ளையுடன் மண உறவை வைத்திருப்பதற்கு அல்லது எவரேனும் விலைமாதின் அல்லது ஒழுக்கக் கேடான பண்பை உடையவரென அறியப்பட்ட ஆளின் தொழிலில் பிரவேசிப்பதற்கு அல்லது தொடர்ந்து இருப்பதற்கு அவர் அறிந்து கொண்டு அனுமதித்திருப் பின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பில், "பதினாறு வயதிற்கு உட்பட்ட பெண் பிள்ளையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிள்ளை ஒருவரின்" என்னும் சொற்களை இடுவதன்மூலம்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவினைத் திருத்துதல்*

**26.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 73 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "நான்கு வயதினை எய்தியுள்ள பிள்ளை ஒருவரின் அல்லது இளம் ஆள் ஒருவரின் கட்டுக்காப்பை; பொறுப்பை அல்லது கவனிப்பை கொண்டுள்ள எவரேனும் ஆள் விபச்சாரவிடுதி ஒன்றில் வதிவதற்கு அல்லது அதற்கு அடிக்கடி செல்வதற்கு அப்பிள்ளையை அல்லது இளம் ஆளை அனுமதித்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிள்ளை ஒருவரின் கட்டுக்காப்பை, பொறுப்பை அல்லது கவனிப்பை கொண்டுள்ள எவரேனும் ஆள் விபச்சார விடுதி ஒன்றில் வதிவதற்கு அப்பிள்ளையை அனுமதித்தால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பினை இடுவதன்மூலமும்:-

*"சிறுவர்களை விபசார விடுதிகளில் இருப்பதற்கு அனுமதித்தல்."*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவினை திருத்துதல்*

**27.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவானது அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பினை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:-

*"சிறுவர்களை பிச்சை எடுக்கச் செய்வித்தல் அல்லது கூட்டிவிடுதல்."*

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவினை நீக்குதல்

**28.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 80 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**29.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 80 ஆம் பிரிவானது அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது

முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**30.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ''பிள்ளை'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

" "பிள்ளை" என்பது பதினெட்டு வயதிற்கு உட்பட்ட ஆள் ஒருவர் எனப்பொருள்படும்;";

(2) ''அட்டவணைப்படுத்தப்பட்ட தவறு'' என்னும் சொல் லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூல மும்:-

"இளம் தவறாளர்களுக்கான பயிற்சிப் பாடசாலை" என்பது (25 ஆம் அத்தியாயமான) இளம் தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) கட்டளைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பயிற்சிப் பாடசாலை ஒன்று எனப் பொருள் படும்"; அத்துடன்

(3) ''இளம் ஆள்'' என்னும் சொல்லமைப்பின் வரை விலக்கணத்தினை நீக்குவதன்மூலமும்;

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**31.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.